சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.400/2021**

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சுமி, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | விவசாயம் |
| தந்தை பெயர் | கிருஷ்ணன் | ஜாதி | |
| கிராமம் | ஆத்துரை | சமயம் | |
| தாலுக்கா | சேத்பட் | வயது | |

12.09.2024 முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 07.01.2013 தேதியிட்ட அடமான கடன் பத்திரம் அசல் **வா.சா.ஆ.1,** 11.11.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.2,** 1,3,5 பிரதிவாதிகளின் அஞ்சலக ஒப்புகைஅட்டைகள் **வா.சா.ஆ.3 வரிசை.** 2 மற்றும் 4 பிரதிவாதிகளின் திருப்பப்பட்ட அஞ்சலக உறை **வா.சா.ஆ.4 வரிசை**. 22.11.2021 தேதியிட்ட பதில் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.5,** தாக்கல் செய்கிறேன். ( வா.சா.ஆ.1 ஆவணம் 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.